RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s326

OPEN ACCESS

# சமகால இலக்கியங்களில் மாறிய களங்களும், மாறாத போர்களும்

மா. ரமாதேவி [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா.

# Changed Struggles and Unchanged Wars in Congregation Literature

**M. Rama Devi** [a, *]

[a] Department of Tamil, Chellammal women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: ramadevimv@ymail.com

Received: 23-04-2021
Revised: 23-04-2022
Accepted: 06-05-2022
Published: 16-07-2022

Check for updates

**ABSTRACT**

The struggles we face in contemporary times are numerous. These are also the reaction of social changes. Today's society is witnessing the struggles of life such as the turmoil of urban life, atrocities against women, the plight of migrants due to declining agricultural production, caste - based social inequalities, the use of agricultural land to set up factories, the plight of people living in economically backward margins, unemployment and the problems of labor. It is time for everyone to consider that the struggle of the peasantry is questioning the future of the world. The history of yaanaikattiporadikkum by our ancient Tamil people will show the world about the prosperity of our country. The farmers who once offered food for the whole village are forced to beg for the next meal because the monsoon is gone and the value of the products, they produce is low. Due to the shortage of paddy, the expansion of roads, the setting up of factories and the exploitation of their lands, farmers have lost their livelihood and are in danger of migrating from where they live today. Although the battlefields faced by the agrarian elites in each period are different, the struggles remained the same no matter what. This article researches on the contemporary novels which deals with the plight of peasants who lost their lives at the hands of the ruling class.

**Keywords:** Social Changes, Contemporary Times, Contemporary Novels, Struggle

## முன்னுரை

காலந்தோறும் மாறிவரும் சூழல் மாற்றத்தினால் நமக்கான தேவைகளும் மாறி வருகின்றன. போராடிப் பெற்ற சுதந்திர மண்ணில் பிறந்தவர்கள் என்பதனாலோ என்னவோ போராட்டம் நம் வாழ்க்கையின் அங்கமாகிவிட்டது. ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் போராட்டங்களை அக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. அவ்வகையில் இலக்கியங்கள் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகின்றது. அன்றாட வாழ்க்கைக்காக மக்கள் சந்திக்கும் போராட்டங்களும், அவர்களின் தேடல்களும், தேவைகளும் காலத்திற்கு காலம் மாறி இருந்தாலும் போராட்டங்கள் ஓய்ந்தபாடில்லை. அதிலும், உழைக்கும் விவசாய வர்க்கம் சந்திக்கும் வாழ்வியல் போராட்டங்கள் எண்ணில் அடங்காதவை. காலத்திற்கு காலம் அவர்கள் சந்திக்கும் போராட்டங்களின் களங்கள் வேண்டுமானால் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால், போராட்டங்கள் தொடர்கதையாகி வருகின்றன. விவசாய உற்பத்தி குறைவினால் தமது வாழ்வாதாரத்தை இழந்து புலம்பெயர்ந்த விவசாய பெருங்குடி மக்களின் வாழ்வியல் போராட்டங்களை, சமகாலத்தில் தோன்றிய நாவல் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## நாவல் இலக்கிய களங்கள்

நாவல் இலக்கியம் தமிழ் மொழியில் அறிமுகமாகி ஒரு நூற்றாண்டுக்கும் மேல் ஆகிவிட்டது. நாவல் இலக்கியம் தான் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை பல மாற்றங்களைச் சந்தித்து வருகின்றது. கதைக்களம், மொழிநடை, பாத்திரப்படைப்பு ஆகியவற்றில் மாற்றம் நிகழ்ந்துள்ளதை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இந்த மாற்றத்திற்கு முக்கிய காரணம் மக்களின் வாழ்வில் ஏற்பட்டுள்ள அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களே எனலாம். ஆரம்பக்காலத்தில் அறத்தை, சமூக நீதியை வலியுறுத்துவதாகவே நாவல் இலக்கியங்கள் இயற்றப்பட்டன. காரணம் அக்காலகட்டத்து தேவை கருதியேயாம். அதுபோல விடுதலைப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் நாட்டு மக்களிடையே விடுதலை வேட்கையைத் தூண்டும் வகையிலான இலக்கியங்கள் இயற்றப்பட்டன. மேலும் அக்காலகட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை ஆகியவற்றை வலியுறுத்தும் இலக்கியங்களும் தோன்றவே செய்தன.

960 களிலிருந்து 1970 வரையிலான நாவல்கள் மார்க்சிய, கம்யூனிசக் கொள்கையை அடியொற்றி தொழிலாளர் நலன், சமுதாய ஏற்றத்தாழ்வு, பொருளாதார நிலை, வறுமை, அரசியல் மற்றும் சமூக மாற்றம் ஆகியவற்றைச் சொல்லுவதாக புனையப்பட்டன. 1970களில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள், விவசாய பெருமக்களின் வாழ்வாதாரம், குடிநீர் பஞ்சம், தொழிற்சாலைகளுக்காக காடுகள் அழிக்கப்படும் நிலை, தீண்டாமை ஒழிப்பு முதலானவற்றைக் கதைக்களங்களாகக் கொண்டு நாவல் இலக்கியங்கள் வெளிவந்தன.

1973 இல் வெளிவந்த அசோகமித்திரனின் 'தண்ணீர்' நாவல் நகரத்தின் குடிநீர் பஞ்சத்தையும், கதைத்தலைவி ஜமுனாவின் வாழ்க்கை வன்கொடுமையால் சுரண்டப்பட்ட அவலநிலையையும் எடுத்துரைக்கின்றது. ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்ற நாவல் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளையும், அவற்றால் அப்பெண்களின் வாழ்வு பலியாகும் நிலையையும் காட்டுவதாக அமைகிறது. இவ்வாறாக நாவல் இலக்கியங்கள் சமூக மாற்றங்களுக்கேற்ப களங்களை அமைத்துக் கொண்டன.

## சமகால இலக்கியங்களில் மாறிய களங்களும் மாறாத போர்களும்

சமகால நாவல் இலக்கியத்தின் கதைக்களங்கள் பெரிதும் மாற்றம் எய்தியுள்ளன. தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒருவனைக் கதைத் தலைவனாகப் படைக்கும் நிலைமாறி இன்று மக்களுள் சாமானியனாக விளங்கும் ஒருவனை கதைத்தலைவனாக்கும் போக்கினைக் காணமுடிகின்றது. இதனால் இன்றைய தமிழ்நாவல் இலக்கியங்கள் பிற்படுத்தப்பட்டோரின், ஒடுக்கப்பட்டோரின் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை எதார்த்தத்தைப் பேசும் இலக்கியமாக பிறப்பெடுத்துள்ளது. இலக்கியம் என்றால் இப்படித்தான் இயற்றப்பட வேண்டும், மொழிநடை நல்ல தமிழில் அமைய வேண்டும் என்பன போன்ற கட்டுகளை உடைத்து இன்று வட்டார வழக்கு நாவல்கள் மிகுதியாக எழுதப்பட்டு வருகின்றன. கொச்சைத் தமிழ், இது இலக்கியத்திற்கு ஆகாது என ஒதுக்கப்பட்ட சாமானியனின் மொழி இன்று இலக்கியத்தரம் பெற்றுள்ளது.

சமகாலத்தில் நாம் எதிர்கொள்ளும் போராட்டங்கள் ஏராளம். இவையாவும் சமூக மாற்றத்தின் எதிர்வினையேயாம். நகர வாழ்வின் பரபரப்பு, பெண்ணுக்கு எதிரான கொடுமைகள், விவசாய உற்பத்தி குறைவினால் புலம்பெயர்ந்து செல்லும் மக்களின் அவலம், சாதிய ரீதியான சமுதாய ஏற்றத்தாழ்வுகள், விவசாய நிலங்களை ஆலைகளை அமைப்பதற்குப் பயன்படுத்துதல், பொருளாதாரத்தில் பின்தங்கிய விளிம்புநிலையில் வாழும் மக்களின் வாழ்க்கை துயரம், வேலைவாய்ப்பின்மை, தொழிலாளர் பிரச்சனை என்பன போன்ற வாழ்வியல் போராட்டங்களை இன்றைய சமுதாயம் களம்கண்டு கொண்டிருக்கின்றது. இவற்றில் விவசாயிகள் சந்திக்கும் போராட்டமானது உலகத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி உள்ளது. விவசாயி சேற்றில் கால் வைக்காவிட்டால் நாம் சோற்றில் கை வைக்க முடியாது என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டிய காலமிது.

## புலம்பெயர்ந்த தமிழர்களின் அவலம்

புலம் பெயரும் தமிழர்கள் என்றால் பலருக்கும் ஈழத்து தமிழர்கள் தான் நினைவிற்கு வருவர். தான் வாழும் இடத்தில் தனது வாழ்வாதாரத்தை இழந்து பிழைப்பைத்தேடி புலம் பெயரும் விவசாயிகளை யாரும் நினைவில் கொள்வதில்லை. யானைக் கட்டி போரடித்த வரலாறு நம்முடையது. காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கியவர்கள் நம் ஆதிகால தமிழர்கள். ஏரிகளும், குளங்களும், கண்மாய்களும் விவசாய பாசனத்திற்குத் தண்ணீர் வழங்கும் அடிப்படை ஆதாரங்கள். இவைகள் இன்று ஆக்கிரமிக்கப்பட்டு விவசாயம் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது (Chidambaranar Samy, 2008). ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பொழுது இந்தியாவில் 39,640 கண்மாய்கள் இருந்திருக்கின்றன. ஆனால் அவற்றின் இன்றைய நிலை வேதனையளிப்பதாக உள்ளது.

ஆரம்ப காலத்தில் பருவமழை பொய்த்துப் போனதே விவசாயம் பாதிக்க பெரிதும் காரணமாக இருந்தது. ஆனால் இன்று சாலை விரிவாக்கத்திற்காகவும், ஆலைகள் அமைப்பதற்காகவும் விவசாய நிலங்கள் சுரண்டப்படுகின்றன. இப்படி ஏரிகளும், குளங்களும், கண்மாய்களும், விவசாய நிலங்களும் இருந்த இடம் தெரியாமல் போனதால் விவசாயம் குறைந்தது. விவசாயம் குறைந்ததால் உற்பத்தியும் குறைந்துள்ளது. இது எதிர்காலத்தில் மாபெரும் உணவு பஞ்சம் ஏற்படக் காரணமாக அமையும். “உணவுத் தட்டுப்பாடு இன்று உலகத்தை அச்சுறுத்துகிறது. ஆப்பிரிக்கா, தென்அமெரிக்கா கண்டங்களைச் சேர்ந்த நாற்பது நாடுகளில் இன்று உணவுக்கான கலவரம் நடக்கிறது என ஐ.நா. சபை பொதுச் செயலாளர் அறிவித்திருக்கிறார். உற்பத்தியாகின்ற உணவு தானியத்தில் 48 விழுக்காடு கால்நடைத் தீவனமாக மாற்றப்படுகிறது. கோதுமை, சோயாமொச்சை, மக்காச்சோளம், கரும்பு போன்றவை டீசலாக மாற்றப்படுகின்றன. உலகில் வாழும் மக்களில் பாதி பேருக்கு உணவுக்கு உத்தரவாதம் இல்லை. 85 கோடி மக்கள் பசியோடு படுக்கைக்குச் செல்கிறார்கள்.” என்ற; தகவலை முன்வைக்கின்றார் (Nammazhvaar, 2019). இதனை உலக நாடுகள் உணர்ந்து அதற்கானத் தீர்வுகளைக் காண முனைப்புக் காட்டி வருகின்றன. நம் நாட்டிலும் இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டே நாவல் இலக்கியவாதிகள் தொடர்ந்து தமது இலக்கியங்களில் விவசாயிகளின் வாழ்க்கைப் போராட்டங்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

1975 - இல் வெளிவந்த கு. சின்னப்ப பாரதியின் ‘தாகம்’ என்ற நாவல் கொங்கு நாட்டு மக்களின் வாழ்க்கையைச் சொல்லும் மார்க்சிய நாவலாகும். மழை பொய்த்துப் போனதால் தான் இருந்த இடத்தைவிட்டு புலம்பெயர்ந்து வெளியூர் சென்ற விவசாயி அங்கு தூறல் விழுவதைக் கண்டு, தன் ஊரிலும் மழை பெய்ததா? என்று மரங்களையும், மண் மணத்தையும் ஆராய்ந்தபடி திரும்பி வந்ததாகக் காட்சிகளை அமைத்து விவசாயத்தை நம்பி வாழும் மக்களின் வாழ்க்கையை நம் கண்முன் நிறுத்துகிறார். அவ்வகையில் 1991 - இல் வெளிவந்த சுப்ரபாரதி மணியனின் ‘மற்றும் சிலர்’ என்ற நாவல் குறிப்பிடத் தகுந்தது. விவசாயமும், நெசவும் கைகொடுக்காத நிலையில் ஹைதராபாத்தில் சென்று குடியேறிய தமிழ் மக்கள் அங்கு வாழவும் முடியாமல் விலகவும் முடியாமல் தவிக்கும் நிலையை எளியமுறையில் எடுத்துரைக்கின்றது. தன் மண் பற்றிய ஏக்கத்துடன் வாழும் ஒருவனைப் பற்றிய கதையிது.

## ரப்பர் நாவல்

குமரி மாவட்டம் 90 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் நெல் விவசாயம் நடைபெற்ற பூமி. காலப்போக்கில் பருவமழை தவறுதல், வனவிலங்குகளால் பயிர் சேதமடைந்து அதனால் நஷ்டம், கால்வாய்கள் ஆக்கிரமிப்பு, ஆட்கள் பற்றாக்குறை என பல இடர்களை விவசாயிகள் சந்திக்கத் தொடங்கினர். இதனால் நெல் விவசாயம் படிப்படியாகக் குறைந்து ரப்பர் பயிரிடப்பட்டது. பல ஏக்கர் தென்னந்தோப்புகள், வயல்கள் அழிக்கப்பட்டு அங்கெல்லாம் ரப்பர் பயிர் ஊடுருவியது. அதிகம் மற்றும் நீண்டகால வருமானம், வன விலங்குகளிடமிருந்து பயிர் பாதுகாப்பு என பலவும் விவசாயிகளை ரப்பர் பக்கம் வெகுவாக ஈர்த்தது. இதனால் நெல் விவசாயம் மிகவும் பாதிப்படைந்தது. இந்நிகழ்வை 1991 - இல் வெளிவந்த ஜெயமோகனின் ‘ரப்பர்’ என்ற நாவல் சித்திரிக்கின்றது. இதனால் குமரி மாவட்டத்தில் ஏற்பட்ட வரலாறு, சமூகப், பண்பாட்டு மாற்றத்தை அறிய முடிகின்றது.

இன்று ரப்பர் வீழ்ச்சியடைந்து வருவதால், மீண்டும் குமரி மாவட்டத்து மக்கள் நெல் விவசாயத்தில் கவனம் செலுத்தி வருகின்றனர். இதற்கு அரசு தனது ஒத்துழைப்பை நல்கினால் அம்மாவட்டம் மீண்டும் நெல் விவசாயத்தில் தன்னிறைவு பெறும் மாவட்டமாக மாறும் வாய்ப்புள்ளது.

## பாவண்ணனின் ‘சிதறல்கள்

பாண்டிச்சேரியில் 1898ஆம் ஆண்டு லண்டனைத் தலைமையகமாக கொண்ட ஒரு பிரிட்டிஷ் நிறுவனத்தால் ரோடியர் மில் 26 ஏக்கரில் தொடங்கப்பட்டது. இங்கு துணிகள் தயாரிப்பதற்கான கச்சா பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால் ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றனர். இந்நிலையில், 1980 - ஆம் ஆண்டு நிர்வாக சீர்கேட்டினால் இந்த மில் மூடப்பட்டது. அந்த காலகட்டத்தில் ரோடியர் மில்லில் வேலை பார்த்து வந்த சுமார் 7,600 தொழிலாளர்கள் வேலை இழந்தனர். இந்நிகழ்வை 1990 - இல் வெளிவந்த பாவண்ணனின் ‘சிதறல்கள்’ நாவல் மிக துல்லியமாக எடுத்தியம்புகின்றது. இந்நாவலில் ரோடியர் மில்லை நம்பி வாழ்ந்த மக்களின் வாழ்க்கை துயர நிலைக்கு தள்ளப்பட்ட செய்தியும், அந்த மில்லுடன் மக்களுக்கு உண்டான உணர்வுபூர்வமான தொடர்பையும் அவலச் சுவையுடன் விளக்கப்பட்டுள்ளது. மில் நஷ்டமானால் மூடப்படுவது என்பது தொழில் யுக நியாயம் என்றால் அதனுடன் சேர்ந்து நெசவாளர்களின் வாழ்வும் முடங்கும் என்பதை ஆளும் வர்க்கம் உணர்வதில்லை.

## சூல் நாவல்

2016 - இல் சோ. தர்மனால் இயற்றப்பட்டது ‘சூல்’ என்ற நாவல். இது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள உருளைக்குடி ஊரை சார்ந்த விவசாய பெருங்குடிகளின் வாழ்க்கையை மையப்படுத்தி எழுதப்பட்ட கதை இது. விவசாயம் நீர்நிலைகளை நம்பியிருக்கும் நிலையில், அதனை எவ்வாறு பராமரித்து விவசாயத்திற்குப் பயன்படுத்துவது என்பதை விவசாயிகள் மட்டுமின்றி பொதுமக்களும் தெரிந்து கொள்வதற்கு இந்த நாவல் பெரிதும் பயனுள்ளதாக அமையும். 2019 - இல் சாகித்ய அகாடமியின் விருதினைப் பெற்றது.

இக்கதையில் மழைக் காலத்திற்கு முன்பே நீர் ஆதாரமான கண்மாய் பராமரிக்கப்பட்டு, மணல் அள்ளப்பட்டு, ஆழப்படுத்தப்பட்டு, மழைநீரால் சூல் கொள்ளத் தயாராக இருக்க கண்மாயை கிராம மக்கள் தயார் படுத்துகின்றனர். இதன்மூலம் அக்காலத்திய மக்கள் நீர் மேலாண்மை எங்ஙனம் கடைப்பிடித்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. மேலும், அக்காலத்தில் கண்மாயைப் பாதுகாப்பதற்கென்று மக்கள் இருந்துள்ளனர். இவர்கள் பரம்பரை பரம்பரையாக இப்பணியை மேற்கொண்டு வந்திருக்கின்றனர். இதனை இந்நாவல் கதாப்பாத்திரமான கருப்பன் கதாபாத்திரம் உணர்த்துகின்றது.

இக்கதையில் கண்மாயின் மேல்மடை, கீழ்மடை வழியாக வயல்களுக்குப் பாயும் தண்ணீர் நடுமடை வழியாக வெளியேறவில்லை. இதனால் அப்பகுதியில் இருந்த வயல்கள் வாடின. இதனைக் கண்ட கருப்பன் மனம் வருந்தி அய்யனார் சாமியிடம் முறையிடுகிறான். அவன் வேண்டுதலைக் கேட்டு அய்யனார் சாமி அவனிடம் பேசியது. “விடிந்ததும் மடையைத் திறந்து காட்டுகிறேன் என்று மார் தட்டி ஊரைக் கூட்டு. மடைக்குடும்பனின் வழிவழியாய் வந்த கௌரவத்தை நிலைநாட்டு. ஊர் கூடி நிற்க மடையில் முங்கு. நான் துணை நிற்பேன். மடை திறக்கும். பயிர் செழிக்கும். ஊர் உன்னை வழிபடும். நீ தெய்வமாக என்னருகில் இருப்பாய். என்றென்றைக்கும், இருவரும் சேர்ந்து காவலிருப்போம் - கண்மாய்க்கு” என்று இறைவன் கூறினார் (Dharman, 2016). இதனைக்கேட்ட கருப்பன் ஊர்மக்கள் அனைவரையும் அழைத்து அவர்கள் கண்முன் அடைப்பை எடுக்க கண்மாயில் பாய்ந்தான். சிறிது நேரத்தில் நடுமடை வழியாக வயல்களுக்கு நீர் பாய்ந்தது. ஊர்மக்கள் மகிழ்ச்சியில் நிறைந்தனர். ஆனால், நீண்ட நேரமாகியும் கருப்பன் மேலே வரவில்லை. அவன் உடல் மட்டும் சிறிது வேளைக்குப் பிறகு கண்மாயில் மிதந்தது. ஊருக்காக தன் உயிரைக் கொடுத்த கருப்பனை மக்கள் தெய்வமாக வணங்கினர்.

## கண்மணி குணசேகரனின் ‘கோரை’

கோரை என்பது புல் வகையைச் சார்ந்தது. பயிருக்கு மேல் உரமிடும் போது பயிர் வரிசைக்கு அருகில் சீராக இடுதல் வேண்டும். அவ்வாறு செய்யாத பொழுது ஊடுபயிராக இக்கோரைப்புல் வளரும். இது அடர்ந்து வளரும் தன்மையுடையது. பயிரிடப்பட்டுள்ள நிலங்களில் வளரும் கோரையை கட்டுப்படுத்த தேவையான களைக்கொல்லிகள் மிகவும் குறைவு. பிரச்சினைக்குரிய கோரைகளைக் களைவது விவசாயிகளுக்கு பெரும் சவாலான பணியாகும்.

2002 - இல் வெளியான கண்மணி குணசேகரனின் ‘கோரை’ என்ற நாவல் ஒரு போகமே பயிர் விளையக்கூடிய நடுநாட்டு நிலைமையை சொல்வது. இக்கதையில் கூலி வேலை செய்யும் உத்தண்டி சொந்தமாகக் கொஞ்சம் நிலம் வாங்குகிறான். மிளகாய் நன்றாக விளையும் என்று எண்ணி தண்ணீர் இறைத்து பயிர் செய்கிறான் அச்சமயம் “மிளகாய் வளர்ச்சிக்காக பன்றிச் சாணத்தை உரமாக இடுகிறான். ஆனால் அப்பொழுது கோரைப் புல் வளரத் தொடங்குகிறது. விசாரிக்கும் பொழுது பன்றிச் சாணத்தில் இருந்த கோரைக் கழிவுகளே காரணம் எனத் தெரிகிறது. அதற்குள் கோரைப் புல்லின் வளர்ச்சி பெருகி நிலம் முழுவதும் கோரையாகி விடுகிறது.” அதை அழிக்க அவனும் அவன் மனைவியும் போராடுகின்றனர். இதில் நாவலாசிரியர் விவசாயிகள் சந்திக்கும் அன்றாட பிரச்சினைகளை கதைப்பொருளாக்கியுள்ளார் (Kanmani Gunasekaran, 2000).

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அதன் கிராமப்புறங்களில் இருந்து தான் தொடங்குகின்றது. அதனால்தான் நமது தேசத்தந்தை மகாத்மா காந்தி அவர்கள் “கிராமங்கள் தான் இந்தியாவின் முதுகெலும்பு” என்றார். ஒரு கிராமத்தின் வளர்ச்சி என்பது அங்கு நடைபெறும் விவசாயத்தைப் பொறுத்தே அமையும். நம் எதிர்காலச் சந்ததியினர் நம்முடைய பூமியில் எந்தவித அச்சமும் குறையுமின்றி வாழ வேண்டும். அதற்கு நாம் நம்முடைய விவசாய நிலங்களைப் பாதுகாக்க வேண்டும். விவசாயிகளின் வாழ்க்கையை வளம் பெறச் செய்ய வேண்டும். அவர்கள் உற்பத்தி செய்யும் விவசாய பொருட்களின் மதிப்பைக் கூட்ட வேண்டும். அந்தப் பொருட்களின் மூலம் கிடைக்கும் லாபத்தை அவர்கள் முழுமையாகப் பெற வழிவகைச்செய்ய வேண்டும்.

## முடிவுரை

நாவல் இலக்கியங்கள் அன்றாட வாழ்க்கைக்காக மக்கள் சந்திக்கும் போராட்டங்களையும், அவர்களின் தேடல்களையும், தேவைகளையும் களங்களாகக் கொண்டு படைக்கப்படுகின்றன. விவசாய பெருமக்கள் சந்திக்கும் போராட்டங்களின் களங்கள் காலத்திற்குக் காலம் மாறி வருகின்றன. ஆயினும் போராட்டங்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. ஆரம்ப காலத்தில் பருவமழை பொய்த்துப் போனதே விவசாயிகளின் பெரும் வாழ்க்கைப் போராட்டமாக இருந்தது. ஆனால் இன்று உற்பத்தி பொருட்களின் மதிப்பிழப்பு, ஏரி, குளங்களின் ஆக்கிரமிப்பு, சாலை விரிவாக்கத்திற்காகவும், ஆலைகள் அமைப்பதற்காகவும் விவசாய நிலங்களை அபகரித்தல் என அவர்கள் சந்திக்கும் போராட்டங்கள் ஏராளம். தான் வாழும் இடத்தில் தனது வாழ்வாதாரத்தை இழந்து பிழைப்பைத் தேடி புலம் பெயரும் விவசாயிகளின் நிலையை கு. சின்னப்ப பாரதியின் ‘தாகம்’ , சுப்ரபாரதி மணியனின் ‘மற்றும் சிலர்’ போன்ற நாவல்கள் பேசுகின்றன. ரப்பர் பயிர் வருகையினால் நெல் விவசாயம் பாதிக்கப்பட்ட நிலையை ஜெயமோகனின் ‘ரப்பா;’ நாவல் தெரிவிக்கின்றது. சோ. தர்மனின் ‘சூல்’ என்ற நாவல் மக்களின் நீர் மேலாண்மை பணிகளை விவசாயிகள் மட்டுமின்றி சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்துரைக்கின்றது. இவ்வாறாக சமகால நாவல் இலக்கியங்கள் விவசாயிகளின் காலத்திற்குக் காலம் மாறுபட்ட போர் களங்களையும் மாறாத போர்களையும் விவரிக்கின்றது.

## References

Chidambaranar Samy, (2008) Pattinapalai, Arivu publications, Chennai, India.

Dharman, Cho., (2016) Sool, Adaiyalam Publications, Chennai, India.

Kanmani Gunasekaran, (2003) Korai, Tamizhini Pathippagam, Chennai, India.

Nammazhvaar, Kho., (2019) Vayuttruku soorida vendum, Eyalvaagai pattippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License